**ARTICLE 21 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00032**
Vol. 20, No. 01 (October 2026) – Part I | pp. 113–120
Received: 30 September 2026 • Accepted: 1 October 2026

# தென் மாவட்ட படைப்புகள் - பாண்டிய நாட்டு திருத்தலமான மதுரை மீனாட்சியம்மன் கோவில்

## Pandya region—specifically the Madurai Meenakshi Amman Temple

**கற்பகவல்லி க[1,*], முனைவர் .பத்மபிரியா மா[2]**

[1]பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,எஸ். எஃப்.ஆர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) சிவகாசி., India

[2]உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழ் ஆய்வுத்துறை, எஸ். எஃப். ஆர். மகளிர் கல்லூரி, (தன்னாட்சி) சிவகாசி., India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** கற்பகவல்லி க — karpagamurugan02@gmail.com

### Abstract

This article examines the significance of the temples in the Pandya region—specifically the Madurai Meenakshi Amman Temple, which is celebrated in the *Tevaram* hymns of the *Panniru Thirumurai*—and explores the temple's architectural structure and its associated glories.

### ஆய்வுச் சுருக்கம்

தென் மாவட்ட படைப்புகள் - பாண்டிய நாட்டு திருத்தலங்கள் ஆக இருக்கக்கூடிய கோவில்களில் குறிப்பாக பன்னிரு திருமுறையில் பாடப்பட்ட தேவார பாடலில் இடம் பெற்ற பாண்டிய நாட்டு திருத்தலமான மதுரை மீனாட்சியம்மன் கோவில் உடைய சிறப்பு பற்றி ஆராய்வதாக இந்த கட்டுரை அமைகிறது மேலும் மதுரை மீனாட்சியம்மன் கோவில் உடைய அமைப்பு அதற்குரிய பெருமைகள் பற்றியதாக இந்த ஆய்வு அமைகிறது .

**Keywords / திறவுச் சொற்கள்:** சமயம்; திருத்தலம்; தென் தமிழகத் தலங்கள்

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** க, க., & மா, மு. . (2026). தென் மாவட்ட படைப்புகள் - பாண்டிய நாட்டு திருத்தலமான மதுரை மீனாட்சியம்மன் கோவில். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

## முன்னுரை

அன்று முதல் இன்று வரை மக்கள் இறை நம்பிக்கையோடு நற்பண்புகளை கடைபிடித்து வாழ்ந்து வருகின்றனர். இந்த நற்பண்புகளை பக்தி இலக்கியங்கள் வாயிலாக நாம் அறிய இயலும். இதற்கு நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்கள் உடைய பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. **மனித வாழ்வை புனித வாழ்வாக மாற்றுவதில் முக்கியமானது இறைமை நிலை** (1) **ஆகும். பண்டைய காலத்தில் கோயில்களில்** மனித நடத்தையை சீரமைக்கும் நோக்கில் பல்வேறு விதிமுறைகள் பின்பற்றப்பட்டன. வானளாவிய **கோயில்**களை **ம**ன்னர்கள் எழுப்பினர்.இந்த கோயில்கள் மூலம் இறை உணர்வும் சிந்தனை மாற்றமும் வலியுறுத்தப்பட்டது தமிழ்நாட்டில் கோயில்களுக்கு தனிச்சிறப்பு உண்டு. அதிலும் குறிப்பாக சேர சோழ பாண்டிய பல்லவர்கள் கட்டிய கோயில்கள் சிறப்பு வாய்ந்தவை. இதனை நாம் இன்றும் கண்கூடாக காண எழுதுகிறது.

## சமயம்

மனித வாழ்க்கையில் அடையப் பெறவேண்டிய அனைத்தையும் சுட்டிக் காட்டுவதாக சமயம் அமைகிறது. அன்பு, அருள், அமைதி இன்பமாகிய

உயர்ந்த பண்புகள் மனித மனதில் ஒளி விட்டு திகழுமாறு செய்து அவனை பண்பு உடையவனாக மாற்றுவது சமயம் ஆகும். "மனித பண்பில் மலர்ச்சி ஏற்படுத்தும் இறை நம்பிக்கையில் உயிரோட்டம் இருக்கிறது"(2) என்பதை இலக்கியங்கள் **பறைசாற்றுகின்றன**. தமிழ்நாட்டில் மட்டும் 35,000க்கும் மேற்பட்ட திருக்கோயில்கள் இருப்பனவாகத் தெரிகிறது. இந்தச் சிறப்பு உலகில் வேறு எந்த நாட்டிலும் காண முடியாத ஒன்று.

"திருத்தலச் சிறப்பு" :

"**திருத்தலச் சிறப்பு**" என்பது ஒரு குறிப்பிட்ட ஆன்மீகத் தலம், கோவில் அல்லது புனிதப் பகுதியின் வரலாற்றுப் பெருமை, ஆன்மீக முக்கியத்துவம் மற்றும் அங்குள்ள இறைவனின் தனித்துவமான சிறப்புகளைக் குறிப்பதாகும்.பொதுவாக, தமிழ்நாட்டிலுள்ள பாடல் பெற்ற சிவஸ்தலங்கள், வைணவத் திவ்ய தேசங்கள், முருகனின் அறுபடை வீடுகள் போன்ற புண்ணிய பூமிகளின் சிறப்புகளை விவரிக்கும் போது இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

ஒரு திருத்தலத்தின் சிறப்பு முக்கியமாக பின்வரும் காரணிகளின் அடிப்படையில் அமைகிறது:

**மூர்த்திச் சிறப்பு:** அங்கு வீற்றிருக்கும் முதன்மைத் தெய்வம் (சுயம்பு லிங்கம், தனித்துவமான சிலை அமைப்பு) மற்றும் அதன் அற்புதங்கள்.

**தல வரலாறு (ஸ்தல புராணம்):** அந்த கோவில் உருவானதற்கான பின்னணி, இறைவனால் நிகழ்த்தப்பட்ட அற்புத லீலைகள் மற்றும் தொடர்புடைய புராணக் கதைகள்.

**தீர்த்தச் சிறப்பு:** பாவங்களைப் போக்கக்கூடியதாகக் கருதப்படும் அங்கேயுள்ள புனிதக் குளங்கள், கிணறுகள் அல்லது ஆறுகளின் பெருமை.

**பதிகங்கள்/பாடல்கள்:** நாயன்மார்கள் (தேவாரம், திருவாசகம்) அல்லது ஆழ்வார்களால் (திவ்ய பிரபந்தம்) மங்களாசாசனம் செய்யப்பட்டுப் பாடப்பட்ட பெருமை உண்டாகிறது.

## தென் தமிழகத் தலங்கள்(பாண்டிய நாடு)

தென் தமிழகம் எனப்படும் பாண்டிய நாட்டில் தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலங்கள் மொத்தம் 14 உள்ளன. இவற்றை 'பாண்டிப் பதினாலு' (3) என்று அழைப்பார்கள்.

## பாண்டிய நாட்டு தேவாரத் திருத்தலங்கள் பட்டியல்

1.மதுரை மாவட்டம்: திருஆலவாய் (மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை) **:** திருஞானசம்பந்தர் சமணர்களை வாதில் வென்று, கூன் பாண்டியனின் வெப்பு நோயைத் தீர்த்து சைவம் தழைக்கச் செய்த மிக முக்கியமான வரலாற்றுத் தலம்.

2.திருஆப்பனூர் (ஆப்பனூர் நாதர் திருக்கோயில், செல்லூர், மதுரை)
3.திருப்பரங்குன்றம் (சத்தியகிரீஸ்வரர் திருக்கோயில்)
4.திருவேடகம் (ஏடகநாதர் திருக்கோயில்)
திருநெல்வேலி மாவட்டம்

திருநெல்வேலி மாவட்டத்தில் மொத்தம் 2 கோயில்கள் உள்ளன.

## 1.குற்றாலம் குற்றாலநாதர் திருக்கோயில்

**திருக்குற்றாலம் (குற்றாலநாதர் கோவில்):** சம்பந்தர் பாடிய தலம். இங்குள்ள அருவியும், இயற்கை எழிலும், சிவபெருமானின் வடிவமும் திருமுறைகளில் போற்றப்பட்டுள்ளன

2.திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோயில்

**திருநெல்வேலி (நெல்லையப்பர் கோவில்):** சம்பந்தரால் பாடபெற்ற தலம். இங்கு இறைவன் நெல்லுக்கு வேலியிட்டு காத்ததால் நெல்லையப்பர் என்று அழைக்கப்படுகிறார்.

**திருவாடானை (ஆடானைநாதர் கோவில்):** இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள சம்பந்தர், அப்பர் பாடிய தலம்.

**ராமேஸ்வரம் (இராமநாதசுவாமி கோவில்):** அப்பர் மற்றும் சம்பந்தரால் பாடப்பெற்ற தலம். ஸ்ரீராமர் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து வழிபட்ட தலம்.

பன்னிரு திருமுறையில் பாடப்பட்ட தேவார பாடலில் இடம் பெற்ற பாண்டிய நாட்டு திருத்தலமான மதுரை மீனாட்சியம்மன் கோவில் உடைய சிறப்பு பற்றி பின்வரும் **தரவு**கள் எடுத்துரைக்கிறது.

## மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில்



**மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில்** மதுரையின் நடுவே அமைந்துள்ள சிவன் கோயிலாகும். இச்சிவன் கோயிலின் மூலவர் சுந்தரேசுவரர் மற்றும் அம்பிகை மீனாட்சியம்மன் ஆவர். இக்கோயிலை மதுரை மீனாட்சியம்மன் கோயில் என்றும் அழைக்கின்றனர். இக்கோயில் தமிழ்நாட்டில் உள்ள 366 மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில்களின் மூலக்கோயிலாக உள்ளது. இத்தலத்தில் முதல் பூசை, அம்பிகை மீனாட்சிக்கே செய்யப்படுகிறது. இத்தலம் தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் பாண்டிய நாட்டுத் தலங்களுள் ஒன்றாகும்.

மதுரையின் சிறப்பு

திருவாசகத் தலங்களுள் ஒன்று எனும் பெருமையையும் உடையது. இத்தலத்தின் பெயரைச் சொன்னாலே முக்தி என்பது சைவர்களின்

நம்பிக்கையாகும். பாண்டியர்கள் முடிசூட்டிக் கொள்ளும் தலங்களுள் இது முதன்மைத் தலமாகும். சைவர்கள் பூசும் திருநீற்றின் சிறப்பைக் கூறும் "திருநீற்றுப் பதிகத்தை " இத்தலத்தில் தான் திருஞானசம்பந்தர் பாடினார்.

இராஜசேகர பாண்டியனுக்கு இறைவன் வெள்ளியம்பலத்தில் கால் மாறி ஆடிய தலம் . மாணிக்க வாசகர் இறைவனது பெருமையை அரிமர்த்தன பாண்டியனுக்கு உணர்த்திய தலம். கூன் பாண்டியனின் வெப்பு நோய் ஞானசம்பந்தரால் நீக்கப்பெற்று, நின்றசீர் நெடுமாற நாயனார் ஆகிய தலம்.

## மதுரையின் வேறு பெயர்கள்

சிதம்பரம், காசி, திருக்காளத்தி வரிசையில், முக்கியமான நான்காவது தலமாகத் திருவாலவாய் உள்ளது. இந்த நகரம் புராண காலத்தில் திருவாலவாய் என்று அழைக்கப்பட்டுள்ளது.

" நலந்திகழ் வாயின் சருகிலைப் பந்தர்செய்த
சிலந்தியை அரசதாள அருளினாய் என்று திண்ணங்
கலந்துடன் வந்து நின்தாள் கருதிநான் காண்பதாக
அலந்தனன் ஆலவாயில் அப்பனே அருள் செய்யாயே"(4)

இத்தலத்தினைச் சிவன் முக்திபுரம் என்றும் இராசமாதங்கி சியாமள பீடம் என்றும் அழைக்கின்றனர்.

இத்தலம், முக்கியமான சிவத்தலமாக மட்டும் இல்லாமல், அம்பிகையின் 51 சக்தி பீடங்களுள் ஒன்றுமாகும்.




இத்தலம் 18 சித்தர்களில் ஒருவரான சுந்தரானந்தரின் சித்தர் பீடமாகவும் உள்ளது. விநாயகரின் அறுபடை வீடுகளில் நான்காவது படைவீடாகவும், சிவபெருமான் மீது பாடப்பெற்ற தேவாரப்பாடல் பெற்ற 274-ஆவது சிவ ஆலயமாகவும், 192-ஆவது தேவாரத்தலம் ஆகவும் உள்ளது. இது தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் பாண்டிய நாட்டுத் தலங்களில் ஒன்றாகும்.

இத்தலத்தில் தரப்படுகின்ற பிரசாதமான தாழம்பூ குங்குமம் பிரசித்தி பெற்றதாகும்.

## தல வரலாறு

விருத்திராசூரனைக் கொன்றமையால்,இந்திரனுக்கு ஏற்பட்ட பிரம்மகத்தி தோசம் நீங்க, கடம்பவனத்தில் இருந்த இந்தச் சிவலிங்கத்தைப் பூசித்துத் தனது தோசத்தைப் போக்கிக் கொண்டதாகவும் ஒரு வரலாறு கூறுகிறது.

முதன் முதலில் கடம்பவனக் காட்டில் சுயம்பு லிங்கத்தைக் கண்டறிந்து, முதலில் இந்தக் கோவிலையும், பின் மதுரை நகரத்தையும், குலசேகரப் பாண்டிய மன்னன் நிர்மாணித்ததாக வரலாறு என்கிறார்கள் சிலர். கடம்பவனமாக இருந்த காட்டை அழித்து, அழகிய நகரமாக்கும்படி, பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்து வந்த குலசேகரப் பாண்டியனின் கனவில், சிவபெருமான் தோன்றிக் கூறியதால், அம்மன்னன் கடம்பவனக் காட்டை அழித்து மதுரை எனும் அழகிய நகரத்தை உருவாக்கினான். சிவபெருமான் தன் சடையிலுள்ள சந்திரனின் அமுதத்தைச் சிந்தி, புதிய நகருக்கு ஆசி வழங்கினார் என்று வரலாறு கூறுகிறது. இக்கோயில்,அம்மனின் 248 சக்தி பீடங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது.

சாத்தப்பர்: இத்தலத்தில் சிவபெருமான் அன்றைய மதுரையின் மன்னரான மலைத்துவச பாண்டியனிடம் பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்டதால் அதாவது பிரம்பால் சிவபெருமானை சாத்தியதால் இத்தல இறைவனுக்கு *சாத்தப்பர்* என்ற திருப்பெயரும் உள்ளது.

மனிதன், ஒன்றில் ஒன்ற வேண்டும். அந்த ஒன்று கடவுள்; எல்லா உலகுக்கும் ஒருவனாக இருக்கின்ற கடவுள்; அவன் அவனுமல்லன், அவனுக்கு ஒன்றென்றே பெயர் கூறினும் பொருந்தும். அவனையே “எல்லா உலகமும் ஆனாய் நீயே” (5)என்று அப்பரடிகள் பாராட்டுகிறார். “அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்”(6) என்று சாத்திரம் பேசும். ஞாலமே விசும்பே இவை வந்து போம் காலமே என்று மணி மொழி பேசும். அந்த ஒன்றில் வேறுபாட்டுணர்வு அற்று, ஒன்றிக் கலந்தால் துன்பம் வாராது என்ற கருத்தை அப்பரடிகள் இனிது விளக்கிப் பாடுகின்றார். அதாவது, தனிமை துன்பம் தரும். பொதுமை இன்பம் தரும். கடவுள் ஒன்று. அதுவே உலகத்திற்கு ஒன்று. அந்த ஒன்றை ஒன்றியிருந்து நினைத்தால் இன்புறலாம் என்பதாகும்.

## மன்றத்துப் புன்னைபோல மரம்படு துயரமெய்தி

ஒன்றினா லுணரமாட்டே னுன்னையும் வைக்கமாட்டேன் கன்றிய காலன்வந்து கருக்குழி விழுப்பதற்கே அன்றினா னலமந்திட்டே னதிகைவீ ரட்டனீரே.(7)

என்பது அப்பர் திருப்பாட்டு.

அப்பரடிகள் உருவகத்தில் செய்திகள் அமைத்து விளக்குவதில் ஈடு இணையற்றவர். அப்பரடிகள், வாழ்க்கையில் அறிவுவினுள் தெளிவும், தெளிவினுள் சிவமும் காண வேண்டுமென்ற கொள்கையினர். வாழ்க்கையில் அறிவு தலைப்படுவதே அருமையிலும் அருமை. அறிவில் தெளிவு காண்பது எளிதன்று. அறிவில் தெளிவின்மையினாலேயே சமயக் கணக்கர் முரண்படுகின்றனர்; மோதுகின்றனர். சமயச் சண்டைகள் கால்கொள்கின்றன. அறிவில் தெளிவு காண்புழி - இன்ப அன்பு முகிழ்க்கும் அதுவே சிவநிலையாக இருக்கிறது.

இந்த நிலையை எய்திட வேண்டிய ஆருயிர் மயக்க வலையிற் சிக்கித் தவிப்பதை அப்பரடிகள் நகைச்சுவை ததும்ப உருவகிக்கின்றார். எரிகின்ற அடுப்பு. அதில் உலைப்பானை உலைப்பானை நீரில் மெள்ளச் சூடேறுகிறது. அந்நிலையில் குளிர் நீரில் கிடந்து மரத்துப்போன ஆமை உலைப்பானையில் இடப்பெறுகிறது. ஆமைக்கு இளம்சூடு உணக்கையாக

இருக்கிறது; மகிழ்கிறது. அந்த மகிழ்ச்சியில் அந்தப்பானை நீர்க்குள்ளேயே திளைத்து நின்று விளையாடுகிறது. என்னே அறியாமை எரிகின்ற அடுப்பிலிருக்கும் உலைநீர் எப்பொழுதும் இளவெந்நீராக இருக்காது. வெந்நீரின் வெப்பநிலை ஏறும். ஆமை, வெப்பநிலை மாற்றத்தால் அழியுமல்லவா? இதை அறிந்துணரும் ஆற்றல் ஆமைக்கு இல்லை. ஆமைக்குத்தான் இல்லையா? ஆறறிவு படைத்த மனிதனுக்கு உண்டோ?

வாழ்க்கையே இவ்வுலகம் என்ற ஓர் அடுப்பு. அவ் அடுப்பில் ஆசை என்ற தீ எரிகிறது. உணர்வாகிய நீர் மனிதன் பெற்ற சிறுபொழுது இன்பமே இளஞ் சூடுடைய வெந்நீர். இதனையே நிலையெனக் கருதித் திளைத்து மகிழ்ந்து விளையாடுகிறான் மனிதன். ஆனால் அவன் பெற்றதோ நிறை இன்பமல்ல. அவன் பெற்றது துன்பத்திற்குக் காரணமாய், இன்பம் போலத் தோற்றிய துன்பமே என்று விளக்க,

**"உலையை யேற்றித் தழலெரி மடுத்த நீரில்**

திளைத்து நின்றாடுகின்ற ஆமைபோல் தெளிவிலாதேன் இளைத்து நின்றாடுகின்றேன் ", என்பார், அப்பரடிகள்.(8)

அப்பரடிகள், பழமொழிகளைக் கொண்டு அறநெறிகளை விளக்குபவர். இறைவன் கருணையை நினைந்து, நெஞ்சு நெகிழப் பாடுபவர். உயிர் அருவப்பொருள்; அதற்கு ஓர் உருவத்தைத் தந்து, உலகிடை அனுப்பித் துய்ப்பன துய்த்து, மகிழ்வன மகிழ்ந்து - குறைநீங்கி நிறைநலம் பெறச் செய்யும் கருணையே கருணை. இதனை,

"என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய் திட்டு
என்னையோ குருவ மாக்கி " (9)

என்று பாடுகிறார். இந்த உருவமாக்கிய பணிக்கு ஈடாக எதனைக் கூறமுடியும்? இந்த உருவத்தினை முதலாகக் கொண்டுதானே மனிதன் வளர்கிறான்!வரலாறு படைக்கிறான்? உலகில் வேறு எந்த அறிவியல் படைப்பையும் விட இந்த மானுட யாக்கையின் படைப்பு அதி நுட்பமானது; அறிவியல் தன்மையுடையது; இந்த உடல்-உயிர்க்கூட்டின் பயன் உயிரை இன்புறுத்தலேயாம். இறைவன் திருவுள்ளம் இன்புறுத்தலேயாம். ஆயினும் உயிர் பெற்றுள்ள சிற்றறிவு அடங்கவா செய்கிறது? அது தன்னிச்சையிலேயே ஆட்டம் போடுகிறது;

அறிவுப் பொருளைத் திருத்திச் சீராக்குதல் எளிய காரியமன்று. அறிவற்ற சடப்பொருள் எளிதில் பக்குவப்படும். அறிவு நாடகமாடும்; நடிக்கும்; உணர்ந்தது போல் காட்டிப் பின் தன்னெறியே மேற்கொள்ளும்; இன்பத்தைத் துன்பமாகக் கருதும்; துன்பத்தை இன்பமாகக் கருதும்; அடக்கினாலும் சில நாள் அடங்கும்; வாய்ப்பு வந்துழி மிஞ்சும். இத்தனை இக்கட்டான நிலையில் உயிருக்கு அறிவு கொளுத்தியே - அதனை அறியச் செய்தே பக்குவப் படுத்தவும் வேண்டியிருக்கிறது; அதை அடிமைப்படுத்தவும் முடியாது. இன்பத்திற்கு எதிர் துன்பமே. துன்பத்திற்குக் காரணம் அறியாமையும் அறியாமையினால் செய்த செயல்களின் விளைவுகளுமாம். நோய் நீங்குகிறவரை உணவு சுவைக்காததைப் போல, வினைநீக்கம் பெறும்வரையில் நிறை நல் இன்பத்தையும் துய்க்கமுடியாது.

“ஆக்கையாற் பயனென் அரன்கோயில் வலம்வந்து
பூக்கையா லட்டிப் போற்றி என்னாத விவ் யாக்கை யாற் பயனென்

கால்களாற் பயனென் கறைக் கண்டனுறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணஞ்சூழாக் கால்களாற் பயனென்"(10)
(அப்பர்)

## மக்கட் சமுதாயம் இன்பமாக வாழவேண்டுமானால் அனைவரும் பரந்த

மனப்பான்மையோடு பிறர் நலத்தைப்பேணி வாழ்வதைத் தவிர வேறு வழி இல்லை. "நான்-எனது" என்னும் செருக்குகள் குறையக் குறைய உயிரினங்களை அன்புடன் நேசிக்கும் பண்பு தோன்றும். இதனை நன்குணர்ந்த நம் முன்னோர்கள், வாழ்க்கையோடு சமயத்தையும் இணைத்து வாழ்ந்து காட்டினர்.

## முடிவுரை

மனித வாழ்வில் நற்பண்புகளால் மட்டுமே இன்பம் நிறைவாய் கிடைக்கும். அத்தகைய நிறைவான வாழ்வு வாழ வழிகாட்டியாய் அமைவன சைவ சமய இலக்கியங்கள் என்று கூறலாம். மனித சக்தியை மகத்தான சக்தியாக மாற்றும் ஆற்றலும் இறை நம்பிக்கையால் மனிதனுக்கு கிடைக்கிறது. நம் முன்னோர்கள், வாழ்க்கையோடு சமயத்தையும் இணைத்து வாழ்ந்து காட்டினர். இதன் பயன் இறையுணர்வு என்று கூறலாம். பன்னிரு திருமுறையில் பாடப்பட்ட தேவார பாடலில் இடம் பெற்ற பாண்டிய நாட்டு திருத்தலமான மதுரை மீனாட்சியம்மன் கோவில் உடைய சிறப்பு பற்றி இந்த **ஆ**ய்வு எடுத்துரைக்கிறது.

## அடிக்குறிப்புகள் (Notes)

1. பக்தி இலக்கியம் ஒரு அறிமுகம், பக் -18
2. திருமுறைத் தலங்கள், பக் -652
3. திருமுறைத் தலங்கள், Tamilvu.org/slet/I4100
4. திருமுறைத் தலங்கள், பக் -657
5. திருவையாறு பண் திருத்தாண்டவம் 720 வது பாடல்
6. Tamilvu.org/slet/I4100
7. Wikipedia. org
8. திருக்களிற்றுப்படியார், 670 வது பாடல்
9. அப்பர், 4 -ம் திருமுறை ,2 வது பாடல்
10. திருஞானசம்பந்தர் நாலாம் திருமுறை அங்க மாலை, 7 வது பாடல்

## துணைநூற் பட்டியல் (References)


1. பக்தி இலக்கியம் ஒரு அறிமுகம், டாக்டர் பா அருணாச்சலம் முல்லை நிலையம் சென்னை முதற்பதிப்பு 2002
2. திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய தேவாரப் பதிகங்கள், சதாசிவ செட்டியார் பிஏ திருமுறை ஒன்று இரண்டு மூன்று சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம் லிமிட்ட 1973
3. திருமுறைத் தலங்கள் ,ஜெய செந்தில்நாதன் பூ மா தமிழ் நிலையம் சென்னை 1995
4. திருக்களிற்றுப்படியார் மூலமும் றையும் உய்ய வந்த தேவனால் பாடப்பட்டது சித்தாந்த சாத்திரம்
5. https://shaivam.org/hindu-hub/temple
6. Tamilvu.org/slet/I4100
7. Wikipedia. org
8. Tamilvu.org/slet/I4100

© 2026 கற்பகவல்லி க, முனைவர் .பத்மபிரியா மா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..